நாள். 02.04.2025
எம்.சி.ஓ.பி எண். 779/2024
ம.சா. 1
பெயர். செல்வம்
த/பெ.திரு. செங்கடேசன்
வயது. 45

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ம.சா.ஆ 1 முதல் 15 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**2வது எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாா் எனது மனைவி கொடுத்தார். அவா் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது. 08.10.2023க்கு பிறகு தொடா் சிகிச்சை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வருமானம் மற்றும் தொழில் குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டி சென்ற லாரியின் உரிமையாளா் மற்றும் காப்பீடு நிறுவனத்தை சோர்க்காமல் இருப்பதால் இந்த வழக்கை பாதிக்கும் என்றால் சரியல்ல. வரைப்படம், மோட்டாா் வாகனம் , குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது அனைத்தும் எனக்கு எதிராக இருப்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மருத்துவ ரசீதுகள் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றும் அதை 2ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காாண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

TAMILSELVI S

Digitally signed by TAMILSELVI S